முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

# 45 – பரதநாட்டியம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை – 2023 (2024)

## 45 – பரதநாட்டியம்

## புள்ளி வழங்கும் திட்டம்

பரீட்சார்த்திகள் முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதும்படி கேட்கப்பட்டுள்ளனர்.;

**வினாப்பத்திரம் I**

பல்தேர்வு வினாக்கள் 01 - 40 1 x 40 = 40 புள்ளிகள்

வினாப்பத்திரம் II இற்குரிய மொத்தப் புள்ளிகள் - 60 புள்ளிகள்

**வினாப்பத்திரம் II**

1 ஆம் வினா (கட்டாயமானது) மொத்தம் - 12 புள்ளிகள்

2 ஆம் வினா

(i) பகுதி புள்ளிகள் 02
(ii) பகுதி புள்ளிகள் 04
(iii) பகுதி புள்ளிகள் 06
மொத்தம் - 12 புள்ளிகள்

3 ஆம் வினா

(i) பகுதி புள்ளிகள் 02
(ii) பகுதி புள்ளிகள் 04
(iii) பகுதி புள்ளிகள் 06
மொத்தம் - 12 புள்ளிகள்

4 ஆம் வினா

(i) பகுதி புள்ளிகள் 04
(ii) பகுதி புள்ளிகள் 04
(iii) பகுதி புள்ளிகள் 04
மொத்தம் - 12 புள்ளிகள்

5 ஆம் வினா

(i) பகுதி புள்ளிகள் 02
(ii) பகுதி புள்ளிகள் 04
(iii) பகுதி புள்ளிகள் 06
மொத்தம் - 12 புள்ளிகள்

6 ஆம் வினா

(i) பகுதி புள்ளிகள் 02
(ii) பகுதி புள்ளிகள் 04
(iii) பகுதி புள்ளிகள் 06
மொத்தம் - 12 புள்ளிகள்

7 வினா சிறுகுறிப்பு இரண்டிற்கு

(i) பகுதி புள்ளிகள் 04
(ii) பகுதி புள்ளிகள் 04
(iii) பகுதி புள்ளிகள் 04
மொத்தம் - 12 புள்ளிகள்

வினாத்தாள் I மொத்தம் 40 புள்ளிகள் + வினாத்தாள் II மொத்தம் 60 புள்ளிகள் 100 புள்ளிகள்

රහස්‍යයි
அந்தரங்கமானது

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2023 (2024)
# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

| විෂය අංකය<br>பாட இலக்கம் | 45 | විෂයය<br>பாடம் | பரதநாட்டியம் |
|---|---|---|---|

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරෙහි අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරෙහි අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරෙහි අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරෙහි අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 1 | 21. | 1 | 31. | 2 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 2 | 32. | 1 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 4 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 3 | 24. | 3 | 34. | 2 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 2 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 1 | 26. | 4 | 36. | 4 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 1 | 18. | 4 | 28. | 4 | 38. | 2 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 2 | 39. | 4 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 3 | 40. | 1 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40** = 40

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

| | |
|---|---|
| **නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව**<br>சரியான விடைகளின் தொகை | 25 / 40 |
| **I පත්‍රයේ මුළු ලකුණු**<br>பத்திரம் I இன் மொத்தப்புள்ளி | 25 / 40 |

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) முதலாவது மண்டியடவு அமைந்துள்ள தாளம் யாது?

(ii) வாத்தியத் திரயத்தில் முதலாவதாக இடம்பெறும் வாத்தியம் யாது?

(iii) அண்ணாவியாரால் கூத்தருக்கு ஆட வேண்டிய பாத்திரத்தை எழுதி வழங்குதல் எவ்வாறு அழைக்கப்படும்?

(iv) 'இசை இயல்' எனும் இலக்கண நூலை எழுதியவர் யார்?

(v) சிவனால் சந்தியா தாண்டவம் ஆடப்பட்ட இடம் யாது?

(vi) கலியுகத்தின் இறுதியில் அதர்மத்தை அழித்து தர்மத்தினை நிலைநாட்ட மகாவிஷ்ணு எடுத்த அவதாரம் யாது?

(vii) தாண்டவத்தினைப் பெண்கள் மென்மையாக ஆடும் பிரயோகம் எவ்வாறு அழைக்கப்படும்?

(viii) பரத நாட்டியத்தின் அழுத்தமும் மணிப்புரியின் குழைவும் கலந்த தன்மையை வெளிப்படுத்தும் சாஸ்திரிய நடனம் யாது?

(ix) பல்லவர் காலத்தில் சிவன் ஆடிய நடனங்கள் என திருஞானசம்பந்தரால் குறிப்பிடப்படும் இரண்டு நடனங்களை எழுதுக.

(x) சங்ககால இலக்கியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

i. ரூபகம் (01 புள்ளி)

ii. வீணை (01 புள்ளி)

iii. சட்டம் கொடுத்தல் (01 புள்ளி)

iv. தஞ்சாவூர் க.பொன்னையாபிள்ளை (01 புள்ளி)

v. மதுரை (01 புள்ளி)

vi. கல்கி அவதாரம் (01 புள்ளி)

vii. சுகுமாரப் பிரயோகம் (01 புள்ளி)

viii. ஒடிசி (01 புள்ளி)

ix. சொக்கம், பாண்டரங்கம் (02 புள்ளிகள்)

x. கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை (02 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**2.** (i) பரதநாட்டியக் கச்சேரி அமைப்பு முறையில் சுத்த நிருத்த வகையைச் சார்ந்த உருப்படிகளைக் குறிப்பிடுக.

(ii) நாட்டியக் கச்சேரி அமைப்பில இரண்டாவதாக இடம்பெறும் உருப்படியின் இலட்சணத்தை எழுதுக.

(iii) மேலே (ii) இல் குறிப்பிட்ட உருப்படியின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிட்டு. அதன் நான்காவது கோர்வையினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

i. அலாரிப்பு, ஜதீஸ்வரம் **(02 புள்ளிகள்)**

ii.

- இது ஒரு நிருத்த உருப்படி
- ஜதியும் ஸ்வரமும் இணைந்து வருவதால் ஜதீஸ்வரம் என அழைக்கப்பட்டது.
- இவ்வுருப்படியில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என மூன்று பகுதிகள் இடம்பெறுகின்றது.
- இவ்வுருப்படியில் தீர்மானமும் பின்னர் நான்கு ஐந்து கோர்வைகளும் இடம்பெறுகிறது.
- உருப்படியை மெருகூட்டுவதற்கு கோர்வையினிடையே மெய்யடவு இடம்பெறுகிறது.
- ஜதீஸ்வரம் பல ராகங்களிலும் தாளங்களிலும் அமைந்துள்ளது.
- ஜதீஸ்வரத்தை ஸ்வரமாலை, ஸ்வரபல்லவி என்றும் அழைப்பர்
- அலாரிப்பிற்கு அடுத்தபடியாக உருப்படி வரிசையில் இரண்டாவதாக இடம்பெறும் உருப்படியாகும்.
- ஸ்வரங்களையே தாதுவாகவும் மாதுவாகவும் கொண்டுள்ளது.
- இவ்வுருப்படியை ஸ்வாதித்திருநாள் மகாராஜா, பொன்னையாபிள்ளை போன்றோர் இயற்றியுள்ளனர். **(04 புள்ளிகள்)**

iii. இராகம் - ஆரபி/சாவேரி

தாளம் - ஆதி/ரூபகம்

**ஆரபி ஜதீஸ்வரத்தின் நான்காவது கோர்வை**

| / | 0 | 0 |
|---|---|---|
| தத்தெய் தாம்<br>தித்தெய் தாம்<br>தத்தெய் தாம்<br>திதிதெய், | / தத்தெய்தாம்<br>தித்தெய் தாம் / | தத்தெய்தாம்<br>திதி தெய், // |
| தத்தெய் தாம்<br>தித்தெய் தாம்<br>தெய்ஹத்தெய்ஹி<br>தெய்ஹத்தெய்ஹி | / தெய் தெய்,<br>திதி தெய் தெய், | / திதி தெய்<br>தெய், திதி தெய் // |

**சாவேரி ஜதீஸ்வரத்தின் நாலாவது கோர்வை**

| | | | |
|---|---|---|---|
| த, க, | = | தி,மி, தகதிமி | // |
| தகதிமி | = | தெய், தெய், திதிதெய், | // |
| த, க, | = | தி,மி,தகதிமி | // |
| தகதிமி | = | தெய்,தெய், திதிதெய், | // |
| த, க, | = | தி,மி,தெய், யா | // |
| தெய்,யி, | = | தெய், யா தெய், யி, | // |
| தெய்யும் தத்த | = | தெய்யும் தா தெய்தெய் திதிதெய் | // |
| தெய்யும் தத்த | = | தெய்யும் தா தெய்தெய் திதிதெய் | // |
| தித்தா த | = | ,தெய்திதி தெய் தித்தா த | // |
| ,தெய்திதி தெய் | = | தித்தா த, தெய்திதி தெய் | // |

**(06 புள்ளிகள்)**

3. (i) கி.பி. 4 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரையான காலம் யாது? இக்காலப்பகுதியில் ஆடற்கலைக்கு மகுடமாக எழுந்துள்ள நூல் யாது?

(ii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட நூல் கூறும் பதினொரு வகை ஆடல்களில் 4 ஆடலகள ஆடப்பெறற சந்தர்ப்பங்களை விளக்குக.

(iii) மேலே (i) இல் நீர் குறிப்பிட்ட நூலிலுள்ள ஆடற்கலை தொடர்பான சிறப்பம்சங்களை விளக்குக.

i. சங்கமருவிய காலம்
சிலப்பதிகாரம்

**(02 புள்ளிகள்)**

ii.

**a. கொடுகொட்டி**
திரிபுரத்தை அழிக்கவேண்டும் என்று தேவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க வாசுகியை நாணாகவும் மேருவை வில்லாகவும் கொண்டு எரிதழல் அம்பொன்றைப் பொருத்திய இறைவன் சிரிப்பாலேயே திரிபுரத்தை எரித்து அதன் வெற்றிக்களிப்பில் கைகொட்டி ஆடியது.

**b. பாண்டரங்கக் கூத்து**
திரிபுரத்தைச் சிவபெருமான் எரித்துச் சாம்பலாக்கினார் அப்போது ஆடியது பாண்டரங்கம். சிலப்பதிகாரத்தின் பதினொருவகை ஆடல் வகைகளுள் இதுவும் ஒன்று. சிவனார் பாரதி வடிவம் பூண்டு வானோராகிய தேரில்நின்று நான்கு வேதங்களாகிய குதிரைகளை அதில் பூட்டி திசைகள் மறையத் திரிசூலம் ஏந்தித் தேர்த் தட்டின் முன்னின்று பாழ் செய்து நீறாக்கி அந்த வெண்ணீறணிந்து ஆடிய ஆட்டம்.

**c. அல்லியம்**
கம்சன் யானை உருவெடுத்து வந்தபோது கிருஸ்ணன் அவனது கொம்பை ஒடித்து ஆடியது.

**d. மற்கூத்து (மல்லாடல்)**
மாயோன் மல்லனாகி அவுணரைக் கொன்று ஆடிய நடனம்.

**e. குடைக் கூத்து**
அவுணர் போரில் தோற்று ஓட முருகன் தன ஒற்றைக் குடையை விரித்து ஆடியது.

**f. துடிக்கூத்து**
முருகன் கடலிடை எதிர்த்த சூரனை வென்று உடுக்கடித்தவாறு ஆடியது.

**g. பேடிக்கூத்து**
ஆண்மைத் தன்மை திரிந்த பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடியது.

**h. மரக்கால் கூத்து**
பாம்பும் தேளுமாய் உருக் கொண்டு வந்த அவுணரை துர்க்கை மரக்காலால் உழக்கி ஆடிய கூத்து.

**i. பாவைக் கூத்து**
அவுணர் மயங்குமாறு திருமகள் ஆடிய நடனம்

**j. குடக்கூத்து**
பாணாசுரனால் சிறைப்பட்ட தன் மகனை மீட்பதற்காக மன்மதன் மண்ணாலும் செம்பாலும், எலும்பாலும் செய்யப்பட்ட குடத்தை தலையின்மேல் வைத்து ஆடிய நடனம்.

**k. கடையக்கூத்து**
வாணாபுரத்து வடக்கு வாசலில் இந்திராணி கடைச்சியர்(உழத்தியர்) வேடம் பூண்டு ஆடிய கூத்து.

**(04 புள்ளிகள்)**

iii.

- வரன்முறையான நடனப்பயிற்சி, நடன சாஸ்திர அறிவு, வாய்ப்பாட்டு இசை, வாத்திய இசை, அரங்கேற்றம், அரங்கம் என்பன பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.
- சிலப்பதிகாரம் காட்டும் அனைத்து நடனச் செய்திகளும் கணிகையர் என்னும் ஓர் இனத்தைச் சுற்றி அமைந்திருப்பதைக் காணலாம்.
- ஒரு நடனப்பெண் எவற்றைக் கற்றிருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.
- நடனத்திற்கு உறுதுணையாக உள்ளவர்களான ஆடல் ஆசிரியன்(நட்டுவன்), இசை ஆசிரியன், தண்ணுமை வாசிப்போன், குழலிசைப்போன், யாழ் ஆசிரியன், அரங்கின் அமைப்பு, தலைக்கோல் என்பவை பற்றி விரிவாக கூறப்படடதன் மூலம் நடனச் செய்தியை அறியக் கூடியதாகவுள்ளது.
- வேத்தியல், பொதுவியல் எனும் இரு நடன வகைகள் பற்றி கூறப்பட்டுள்ளது.
- மாதவி ஆடிய பஞ்ச சந்திக்கௌத்துவம், பதினொருவகை ஆடல் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.
- வரிக் கோலங்கள், நிலம்சார் நடனங்களான வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை குன்றக்குரவை பற்றியும் விபரிக்கிறது.
- நடனமாடுவதற்கு தனி அரங்கங்கள் இருந்தமை பற்றிக் கூறப்படுகிறது.
- ஊர் மக்கள் நடனத்தைக் காணுவதற்குரிய ஆடம்பலம் அரங்குகள் இருந்ததென்றும் செய்திகள் காணப்படுகிறது.
- ஆடல் மகளீர், பாடல் மகளீர் என்னும் இரு திறத்து மக்களும் வாழுகின்ற வீதிகள் இருக்கின்றன.
- சிறந்த நாட்டிய மங்கைக்கு வழங்கப்பட்ட தலைக்கோலிப்பட்டம் மாதவிக்கு வழங்கப்பட்டது.
- நடனத்திற்குரிய நான்குவித பாவங்களையும் சிலப்பதிகாரம் விரிவாக விளக்கியுள்ளது.

**(06 புள்ளிகள்)**

4. பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை ஸ்லோகத்துடனும் அதன் கருத்துடனும் எழுதுக.
(i) சுகதுண்ட ஹஸ்தம்
(ii) கீலக ஹஸ்தம்
(iii) ஸம்புட ஹஸ்தம்

(i) சுகதுண்ட ஹஸ்தம்

ஸ்லோகம்

பாணப்ரயோகே குந்தார்த்தே ஆலயஸ்யஸ்மிருதிகரமே /
மர்மோக்கியாம் உக்ரபாவேஷு சுகதுண்டோணியுஜ்ஜதே //

கருத்து

பாணப்ரயோகே - அம்பெய்தல்
குந்தார்த்தே - ஈட்டி
ஆலயஸ்யஸ்மிருதிகரமே் - பழையவற்றை நினைவு கூறுதல்
மர்மோக்கியாம் - முணுமுணுத்தல்
உக்ரபாவேஷு கடுங்கோபம்

(04 புள்ளிகள்)

(ii) கீலக ஹஸ்தம்

ஸ்லோகம்

ஸ்னேகே நர்மானுலாபேச கீலகோவிநியுஜ்ஜதே //

கருத்து

ஸ்னேகே - ஸ்நேகம்
நர்மானுலாபேச - சந்தோசமான பேச்சுக்கள்

(04 புள்ளிகள்)

(iii) சம்புட ஹஸ்தம்

ஸ்லோகம்

வஸ்துவாசாதே சம்புடேச சம்புடஹர ஈரிதக //

கருத்து

வஸ்துவாசாதே - பொருட்களை மூடிவைத்தல்
சம்புடேச - பெட்டி

(04 புள்ளிகள்)

**5.** (i) யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களுக்குரிய கூத்துக்களை முறையே வகைப்படுத்துக.

(ii) நாட்டுக் கூத்தின் தோற்றம் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

(iii) தமிழ் நாட்டின் தென் பகுதியிலிருந்து வந்த கூத்தினைப் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு விளக்குக.

- ஆடல்
- பாடல்
- ஆற்றுகை, ஒப்பனை

i. யாழ்ப்பாணம் - வடமோடி, தென்மோடி

மன்னார் - வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்புக் கூத்து

**(02 புள்ளிகள்)**

ii.

- உலகில் மனித இனம் தோன்றிய நாளே நாட்டார் வழக்கியலின் ஆரம்ப நாள் எனலாம்.
- நாட்டார் என்ற சொல் படித்த படிக்காத மக்கள் எல்லோரையும் குறிக்கும்.
- வழக்கியல் என்பது வாய் வழக்கிலுள்ள கதைகளைக் குறிக்கும்.
- விடுகதைகள், பழமொழிகள் முதலியவற்றையும் வழக்கத்திலுள்ள நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள் முதலியவற்றையும் குறித்து நிற்கும்.
- நாட்டுப்புற மக்கள் தமது உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துவர்.
- நகை, காதல், வீரம், கோபம், சோகம், அச்சம், விருப்பு, வெறுப்பு என பலவகையாக வெளிப்படுத்தினர்.
- தமது பிரதேச வேறுபாடுகளுக்கமைய வெவ்வேறு கூத்துக்கள் நிகழ்த்தினர்.
  - காமன் கூத்து, அர்ச்சுனன் தவசு மலையகத்திலும், பறைமேளக் கூத்து மட்டக்களப்பு பறையடிக்கும் மக்களாலும், வசந்தன் கூத்து மட்டக்களப்பு உழவர்களாலும், மகிடிக்கூத்து மட்டக்களப்பு பிரதேசத்திலும் ஆடப்படுகிறது.
- கிராமத்தில் கூத்து ஒன்றை பின்வரும் அம்சங்களில் உருவாக்கினர்
  - ஊர் கூடுதலும் அண்ணாவிமார் கதை தெரிதலும்
  - ஊருக்குச் சொல்லுதல்
  - சட்டம் கொடுத்தல்
  - தினக்கூத்து
  - சதங்கை அணிதல்
  - அடுக்குப் பார்த்தல்
  - அரங்கேற்றம்
  - வீட்டுக்குவீடு ஆடுதல்
  - இரண்டாம் அரங்கேற்றம்

**(04 புள்ளிகள்)**

iii. ஆடல்

- ஆடல் நுணுக்கமானதாகவும் கடினமான ஆட்டமாகவும் காணப்படும்.
- வட்டக் களரியில் நாலு பக்கமும் பார்ப்போருக்கு ஏற்ப சுற்றி ஆடப்படும்
- காலமேற்றுதல் இருக்கும்

பாடல்

- சபையோரே வரவுப் பாடல் பாடி நடிகரை அறிமுகம் செய்வர்
- விருத்தங்கள் இழுத்துப் பாடப்படும்
- தென்மோடியில் பாத்திரம் பாடியபின்னர் பாடலின் இறுதி வரி மாத்திரம் பிற்பாட்டுக்காரரால் இரட்டித்துப் பாடப்படும்

ஆற்றுகை ஒப்பனை

- சபையோர் எனப்படும் பிற்பாட்டுக்காரர் அன்றேல் அண்ணாவியாரே நாடகத்தை நடத்திச் செல்வார்
- மணிகள் பூக்கள் பொருந்திய பாரம் குறைந்த உடை
- பாரங்குறைந்த பூ முடி அணிந்திருப்பர்

**(06 புள்ளிகள்)**

6. (i) தொழில்சார் கிராமிய நடனங்கள் நான்கு தருக.

(ii) தொழில்சார் நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளைக் குறிப்பிட்டு, அவை எவ்வகையைச் சார்ந்தவை என்பதையும் பட்டியற்படுத்திக் காட்டுக.

(iii) பச்சைகுத்துதல், பாம்பு ஆட்டுதல் போன்ற வாழ்க்கைப் பண்புகளைக் கொண்ட மக்கள் குழுவினரால் ஆடப்படும் தொழில்சார் நடனத்தை பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

- தொழில்
- ஆடல், பாடல்
- ஒப்பனை

i.

- மீனவ நடனம்
- தேயிலைக் கொழுந்து நடனம்
- வாள் நடனம்
- குறவன் குறத்தி நடனம்
- வேடுவ நடனம்
- அரிவி வெட்டு நடனம்
- சுளகு நடனம்

**(02 புள்ளிகள்)**

ii.

- தோற்கருவி- தப்பு, தபேலா, செண்டை, பேரிகை
- காற்றுக் கருவி - ஹார்மோனியம், சங்கு
- கஞ்சற் கருவி - பெரிய இலைத்தாளம்

**(04 புள்ளிகள்)**

iii.

- மலைப் பிரதேசங்களில் குறவன் குறத்தியர் வாழ்ந்தனர்
- இவர்களுடைய தொழில் குறிசொல்லுதல், தினைப்புலம் காத்தல், கிழங்கு கல்லுதல், தேன் எடுத்தல், பச்சை குத்துதல், பாம்பாட்டுதல், குரங்கு ஆட்டுதல் என்பனவாகும்.
- ஆடல் ஆனது குறவன் குறத்தியர் தமது பிரதேசங்களிலுள்ள வளங்களைப் புகழ்ந்து கூறுவதுடன் குறி சொல்லும் பாங்கினைச் சித்தரிப்பதாகவும் அமைந்திருக்கும்.
- பாடல்களும் சொற்களும் எளிய நடையில் அமைந்திருப்பதுடன் அச்சொற்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறும்.
- பாடல்கள் துள்ளல் இசையில் அமைந்திருக்கும்
- ஒப்பனையானது பச்சை மணி, பவள மணிகளால் தங்களை அலங்கரித்து பல வர்ண உடைகளை அணிந்தும் இலை குழைகளைத் தரித்தும் ஆடுவார்கள்

**(06 புள்ளிகள்)**

7. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.
   (i) தீர்மானம்
   (ii) ஜாவளி
   (iii) தர்மிகள்

i. தீர்மானம்

- பரதநாட்டியத்தின் நுட்பமான முடிவே தீர்மானம்.
- சொற்கட்டினால் லயத்தோடு கலந்த முடிவுத் துண்டுகளே தீர்மானம்.
- இது ஜதிகளினால் ஆக்கப்பட்டது.
- இது சிக்கலானதும் அழகானதும் உறுதியானதும் ஆகும்.
- லயப் பிடிப்புடன் இருக்க வேண்டும்.
- உருப்படி அங்கங்களை முடிப்பதற்கு எடுத்தக் காட்டாக அமையும் பகுதி ஆகும்
- சிக்கலான அடவுகள், தாளஜதி முதலியவற்றால் தொகுக்கப்பட்ட சொற்கட்டு மாலையே தீர்மானம் எனப்படும்.
- அடவுகள் சுருக்கமாகவும், லயப்பிடிப்புடனும், பிரகாசம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும்.
- தீர்மானம் சிறிதாகவோ பெரிதாகவோ இருக்கலாம்.
- மூன்று காலங்களிலும் அமைந்திருக்கும் அதாவது விளம்ப காலத்தில் ஆரம்பித்து மத்திம காலத்தை அடைந்து துரித காலத்தில் முடிவடையும்.
- மிருதங்கச் சொற்கட்டுடன் கூடிய ஜதிகளைக் கொண்டு மகுட அடவுகளுடன் முடிவுறும் கோர்வைகளும் தீர்மானம் எனப்படும்.
- இது பாட்டு அல்லது நடனத்தின் முடிவிலோ அல்லது பகுதிகளின் இடையிலோ வரும்.
- தீர்மானம் இன்றி கோர்வைகள் முடிவடைவதில்லை.

- எப்போதும் தீர்மானம் ததிங்கிணதொம், கிடதகதரிகிடதொம் என்னும் மிருந்தங்கச் செற்கட்டுகளுடன் முடிவடையும்.

**(04 புள்ளிகள்)**

ii. ஜாவளி

- ஜாவளியானது நாயகன் நாயகி தோழி ஆகிய மூவர் அடங்கிய பாத்திரம் கொண்ட நாட்டிய உருப்படி.
- சிருங்கார ரஸம் உச்ச நிலையில் சொல்லப்பட்டிருக்கும் உருப்படி.
- பெரும்பாலும் கன்னட மொழியிலும் தெலுங்கு மொழியிலும் அமைந்திருக்கும்.
- இறைவனை தலைவனாகக் கொள்ளாமல் கவிஞர்கள் தம்மை ஆதரித்த மன்னர்கள், வள்ளல்கள் முதலானோரை தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு காதல் உணர்வுகளை வெளிப்படையாகவும் பச்சை (சிருங்காரம்) ஆகவும் கொண்டு அமைக்கப்பட்டு காணப்படும்.
- கர்நாடக இசை மட்டுமல்லாது ஹிந்துஸ்தானி இசையிலும் இயற்றப்பட்டு இருக்கும்.
- ஜாவளிகள் சங்கதிகள் பாடுவதற்கு ஏற்றவைகளாக விளங்குகின்றன.
- ஜாவளி அகப்பொருள் பற்றிய மெல்லிசைப் பாடல்கள் பெரும்பாலும் நாட்டுப்புற மொழியில் அமைந்திருக்கும்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் போன்ற பகுதிகளைக் கொண்டு அமைந்திருக்கும்.
- செஞ்சுருட்டி, பெஹாக், கமாஸ், அமீர்கல்யாணி, காபி போன்ற இன்பச் சுவைமிக்க இராகங்களில் அமையப் பெற்றிருக்கும்
- ராமநாதபுரம் சீனிவாச ஐயங்கார் ஜாவளியில் சிட்டாஸ்வரத்தை அமைத்துள்ளார்.
- ஜாவளி பொதுவாக விறுவிப்பான லயப்போக்கை கொண்டுள்ளது.
- மத்திமகால நடைகளில் பாடப்படுகிறது.
- சுலபமான ஆதி, ரூபக, சாபு தாளங்களில் அமைந்திருக்கும்.
- ஜாவளி பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் தஞ்சை நால்வர்களான பொன்னையா, சின்னையா, வடிவேலு காலத்தில் மிகப் பிரபல்யமடைந்து காணப்பட்டது.
- ஜாவளி ஹிந்துஸ்தானி இசையில் கஜல் என்னும் இசை வகையைச் சார்ந்தது.
- நாட்டியத்திற்காக இயற்றப்பட்டிருந்தாலும் இசைக் கச்சேரியில் ஜாவளி பாடப்பட்டு வருகிறது.
- கர்நாடக இசை அரங்குகளில் நிகழ்ச்சியின் இறுதியில் பாடும் உருப்படியாக ஜாவளி உள்ளது.
- தர்மபுரி சுப்பராயர் பட்டாபி ராமையர், பட்டனம் சுப்ரமணிய ஐயர், ராமநாதபுரம் சீனிவாச ஐயங்கார், தஞ்சை சின்னையாப்பிள்ளை ஆகியோர் இயற்றியுள்ளனர்.

**(04 புள்ளிகள்)**



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

iii. **தர்மிகள்**

- இரண்டு வகைப்படும் நாட்டிய தர்மி, லோகதர்மி
- மக்களின் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், அவர்களது எண்ணங்களை வெளிப்படுத்த அவர்கள் சாதாரண நடைமுறையில் செய்யும் அங்க அசைவுகள் போன்றவற்றை உணர்ந்து கொண்டு இயற்கையாக செய்யும் அபிநயம் லோக தர்மியாகும்.
- லோக தர்மியின் பிரதான அம்சங்கள் பாத்திரங்களின் இயல்பான நடத்தைளைக் காட்டுவது, மிகைப்படுத்தலற்றது. லலித அங்க அசைவுகள் அற்றது. இம்மரபில் பின்னணி மற்றும் அரங்க பொருள்களை பெருமளவில் பயன்படுத்துவர்.
- லோக தர்மிக்கு உதாரணமாக ஒரு பெண் நீரெடுக்க செல்வதை இயல்பான ஆடை ஆபரணங்கள் அரங்கப் பொருட்களுடன் அபிநயித்துக் காட்டுவதும் உண்மையில் அரங்கில் கண்ணீர் சிந்தி நடிப்பதுமாகும்.
- உலக இயல்பிற்கு சற்று அப்பாற்பட்டு கலை வடிவத்திற்கு முதலிடமளிக்கும் நாடக வழக்கு நாட்டிய தர்மி ஆகும்.
- நாட்டிய தர்மிக்கு உதாரணமாக ஒரு பெண் நீர் எடுக்கச் செல்வதை கற்பனைகள், பாவங்கள், முத்திரைப் பிரயோகங்களுடன் அபிநயித்துக் காட்டுவதாகும்.
- நாட்டிய தர்மியில் மிகைப்படுத்தப்பட்ட நடிப்பு, கற்பனைகள், பாவங்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள், லலிதம் கலந்த அங்க அபிநயங்கள், நாடகப்பண்பு செறிந்த காட்சி அலங்காரங்கள், அசாதாணமாக நடந்து கொள்ளும் பாத்திரங்கள் கொண்ட நாடகமாகும்.
- நாட்டிய தர்மி உலகில் நிகழும் யாதேனும் ஒன்றினை பாத்திரங்களால் ஆங்கிக அபிநயம் மூலம் முன்வைப்பது இதன் பணியாகும்.
- நாட்டிய தர்மியில் பாடல்கள், அசைவுகள் லயத்தின் படி அமைவனவும் இதில் அடங்கும்
- நாட்டிய தர்மியில் விசேடமான ஒப்பனைகள், வேட உடைகள், காட்சி அலங்காரங்கள் என்பன பயன்படுத்துவதும் இதில் அடங்கும்.

**(04 புள்ளிகள்)**

ஓ ஓ ஓ

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න